பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை 17.11.2024 கதிர் 010

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் யாருக்கு என்பதுதான் இப்போது தமிழ் அரசியல் பரப்பில் 'ஹாட்டோக்'. அதனைசுமந்திரனுக்குக் கொடுக்க வேண்டும் என்றும்

# புதிய அமைச்சரவை நாளை பதவியேற்பு

25அமைச்சுக்களைஉள்ளடக்கியவகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அமைச்சரவை நாளை பதவியேற்கவுள்ளது.

புதிய அமைச்சரவை நியமனம் குறித்து தேசியமக்கள்சக்தியின்சார்பில்அனுராதபுரம் மாவட்டத்திலிருந்துநாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள வசந்த சமரசிங்க தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலானபுதியஅமைச்சரவைநாளை நியமிக்கப்படவுள்ளது. இந்த அமைச்சரவை 25 அமைச்சர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

நவம்பர் 21 புதிய நாடாளுமன்றம் கூடவுள்ளது. அதன் பின்னர் எமது பணிகள் விரைவாகத் தொடங்கப்படும். அபிவிருத்தியடைந்தநாட்டைக்கட்டியெழுப்பும் பணிகளை ஆளும்தரப்பு உடனடியாக ஆரம்பிக்கும்.

அதிகபட்சமாக இருபத்தைந்து பிரதி அமைச்சர்களும்நியமிக்கப்படவுள்ளனர்.

நல்லாட்சிக்காக

## புதிய ஆளும்தரப்புடன் ஒத்துழைக்கத் தயார்

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் அறிக்கை

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும்வெளியேயும்ஜனநாயகத்தின் அடிப்படையிலான அனைத்து குடிமக்கள் உரிமைகளையும் பாதுகாக்கும், சமூக நீதியைப் பாதுகாக்கும் நல்லாட்சிக்காக வேண்டி, புதிய ஆட்சிக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுகிறோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொதுத் தேர்தலின் பின்னர் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 10 ஆவது நாடாளுமன்றத்திற்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கதலைமையிலானதேசியமக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று மாபெரும் வெற்றியீட்டியதற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## வலுவிழந்த மக்களின் காவலனாக இருப்பேன்

அம்பாறை எம்.பி. கோடீஸ்வரன் தெரிவிப்பு

வலுவிழந்துஇருக்கின்றமக்களின் காவலனாக தொடர்ந்தும் இருப்பேன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்டத்தில் வெற்றிபெற்றுள்ள கோடீஸ்வரன் தெரிவித்தார்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்ட தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என்னை தெரிவு செய்த மக்களுக்கு நன்றிகள்.

நாடாளுமன்றத் தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் இலங்கைத் தமிழ்அரசுக்கட்சிசார்பாகநாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு பெரும் பாடுபட்டுள்ளதை நான் அறிவேன்.

இந்தத் தேர்தல் பரப்புரைக்கு மக்கள் வழங்கிய பேராதரவுக்கு மிக்க நன்றிகள் - என்றார்.



## தேர்தல் முடிவுகள் பெரும் அதிர்ச்சி

கஜேந்திரகுமார் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமக்கு அதிர்ச்சியளித்துள்ளன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியைப்பொறுத்தவரையில் பொதுத்தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எமது வாக்கு வங்கியில் ஏற்பட்ட சரிவுதான் இந்த அதிர்ச்சிக்குக் காரணம்.நாம் ஏனைய தமிழ்த் தரப்புக்களுடன் இணைந்து செயற்படவில்லை. இதற்குக் கொள்கை முரண்பாடே முக்கியமான காரணம். எமது கொள்கையிலிருந்து நாம் பின்வாங்கவில்லை. அதனாலேயே தனித்து நின்றோம். அப்படியிருந்தும் வாக்குகள் சரிந்துள்ளன.

எவ்வாறாயினும், தமிழ் மக்கள் அளித்துள்ள

யாழ்ப்பாணத்தில்

## டக்ளஸ், அங்கஜன் வாக்குகளே தேமச வெற்றிக்கு மூலதனம்

சிவாஜிலிங்கம் விளக்கம்

தேசியமக்கள்சக்தியாழ்ப்பாணத்தில் டக்ளஸ், அங்கஜனின் வாக்குகள் மூலமே வெற்றி பெற்றது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவர் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

## ஐதேகவுடன் ஐமசக்தி இணைப்பு அவசியம்

ஆசு மாரசிங்க வலியுறுத்து

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன்இணைந்துகொள்ளுமாறு பகிரங்கமானஅழைப்பைவிடுப்பதாக அக்கட்சியின் உறுப்பினரான ஆசு மாரசிங்க பகிரங்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

## தேசியப் பட்டியல் எம்.பி.யாகிறார் நாமல் ராஜபக்ச

தமது கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் மூலம் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக்கப்

## இன்றைய அரசியல் குழு கூட்டத்தில் கேட்டாலும் எம்.பி. பதவி ஏற்கேன்

சுமந்திரன் திட்டவட்டம்



இலங்கைத்தமிழ்அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்றஉறுப்பினரைத் தெரிவு செய்வதற்காக கட்சியின் அரசியல் குழு இன்று வவுனியாவில் கூடுகின்றது. இந்தக் கூட்டத்தில் கட்சி கேட்டுக் கொண்டாலும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கட்சியின் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்அரசுக்கட்சிக்குக்கிடைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தான் ஏற்கமாட்டார் என்று சுமந்திரன் ஏற்கனவேதெரிவித்திருந்தார். எனினும் கட்சியின் மத்திய குழு எடுக்கும் முடிவுக்குத்தான்கட்டுப்படுவார்என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, கட்சியின் மத்திய குழு சுமந்திரனின்

## தேசியப்பட்டியல் குறித்து தீர்மானிக்க தமிழ் அரசுக் கட்சி இன்று கூடுகிறது

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ள தேசியப் பட்டியல் இடத்தை யாருக்கு வழங்குவதுஎன்பதைத்தீர்மானிப் பதற்காக அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் இன்று நடை பெறவுள்ளது.

இந்த அரசியல்குழுக் கூட்டம் காலை பத்து மணிக்கு வவுனியாவில்உள்ளஅக்கட்சியின் மாவட்டக் கிளை காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு வடக்கு, கிழக்கில் ஏழு ஆசனங்கள் கிடைத்துள்ள நிலையில் தேசியப் பட்டியலில் ஆசனமொன்றுஒதுக்கப்பட்டுள்ளது. அதனை இம்முறை யாழ்.தேர்தல் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யுமாறுகட்சியின்உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைத்தாலும் அது கிளிநொச்சிநிர்வாகமாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் சிறீதரனுக்கே கிடைத்துள்ளது. அத்தோடு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு முயற்சிகள்இடம்பெறவுள்ளதாலும் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் இருப்பது அவசியம். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு தேசியப் பட்டியல்

## இனி இது .....

கொடுக்கக்கூடாது என்றும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன இரு தரப்புக்கள்.

நேற்று சுமந்திரனை பல தடவைகள் சந்தித்த கட்சியின் ஆதரவாளர் குழுக்கள் அவர் தேசியப் பட்டியல் ஊடாக அவர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தின. எனினும் அதற்குச் சாதகமான பதிலைச் சுமந்திரன் வழங்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய அரசமைப்பு முயற்சி இடம்பெறவுள்ளதனால் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் இருப்பது அவசியம் என்று சுமந்திரனை நாடாளுமன்றம் செல்ல வலியுறுத்தும் தரப்புக்கள் எண்ணுகின்றன. அத்தகைய முயற்சி ஒன்று இடம்பெறும்போது அது பற்றிப் பார்க்கலாம் என்றுகூறி அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளார் சுமந்திரன்.

தேசியப்பட்டியலை யாருக்கு வழங்குவது என்று ஆராயக் கட்சியின் அரசியல் குழு இன்று வவுனியாவில் கூடுகின்றது. அந்தக் குழு ஒருவேளை சுமந்திரனை தேசியப் பட்டியல் நாடாளுமன்றப் பதவியை ஏற்கும்படி கேட்டாலும் அதனை ஏற்பதில்லை என்கிற முடிவில் தெளிவாக, உறுதியாக இ-ருக்கின்றார் அவர் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. வவுனியாவிலிருந்து போட்டியிட்ட கட்சியின் செயலாளர் சத்தியலிங்கம் அல்லது கட்சியின் நிர்வாகச் செயலாளரும் தேசியப்பட்டியலுக்காகப் பெயரிடப்பட்ட குலநாயகம் ஆகிய இருவரில் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கட்சி உயர் வட்டங்கள் தெரிவித்தன.

அதேநேரம், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தனக்குத் தரவேண்டும் என்று கட்சியின் பதவி விலகிய தலைவரான மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார். அவர் இது தொடர்பில் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சிலரும் தமக்கு தேசியப்பட்டியல் தரப்படவேண்டும் என்று கேட்டுக் கடிதம் எழுதியுள்ளனர்.

மாவையருக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப்பெறுவது குறித்து வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் மாவையின் சம்பந்தி சசிகலா வீட்டில் மந்திராலோசனை ஒன்று நடத்தப்பட்டுள்ளது. மாவையரின் மகனும் சசிகலாவின் மருமகனுமான கலையமுதனும் இருந்தனர். சங்கு கூட்டணிக்கு வேலை செய்த சிலரும் அங்கிருந்தனர். அந்த மந்திராலோசனையில் தேசியப்பட்டியலை மாவையருக்கு எப்படியும் பெறப்படவேண்டும் என்று பேசப்பட்டுள்ளது. அதுதவிர, மாவையருக்கு தேசியப்பட்டியலை வழங்காமல் வேறு யாருக்காவது அதனை வழங்கினால், குறிப்பாக சுமந்திரனுக்கு அதனை வழங்கினால் அதற்கெதிராகத் தான் வழக்குப் போடுவார் என்று சிறீதரன் மாவையர் தரப்புக்கு உறுதியளித்துள்ளார் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமந்திரன் நாடாளுமன்றத்திற்கு வரக்கூடாது என்பதில் சிறீதரன் மிக உறுதியாகவே உள்ளார் என்று தெரிகிறது. அதனால் இன்றைய அரசியல்குழுக்கூட்டத்தில் யாராவது சுமந்திரனின் பெயரை எடுத்தால் அதனை அவர் கடுமையாக எதிர்ப்பார் என்றும் மாவையருக்கே அந்த இடம் வழங்கப்படவேண்டும் என்று வாதிடுவார் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புக்கான முயற்சிகளை, அது சமஷ்டி அல்ல என்று கூறி முற்றிலுமாக எதிர்ப்பதற்கு சுமந்திரன் அங்கு இல்லாமல் இருப்பதே வசதி என்று அவரது தரப்புக் கருதுவதாகத் தெரிகிறது. அவருக்கு ஆதரவளித்த புலம்பெயர் தரப்புக்களை இந்த நகர்வு திருப்திப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் தேசியப் பட்டியலை மாவையருக்கு வழங்குவதற்கு அரசியல் குழுவில் பலத்த எதிர்ப்பு இருக்கும் என்றும் தெரிகிறது. அதற்குக் காரணம் நாடாளுமன்றத் தேர்தலில் மாவையர் தமிழ் அரசுக் கட்சிக்காக ஒ-ரு சிறு துரும்பைக்கூட நகர்த்தவில்லை, அதே சமயம் அவரது சம்பந்தியும் மகனின் மாமியாருமான சங்கு கூட்டணியில் போட்டியிட்ட சசிகலாவுக்காக வலி. வடக்கு உள்ளிட்ட பகுதிகளில் மகன் கலையமுதனும் ஆதரவாளர்களும் தீவிரமாகச் செயற்பட்டதையும் அவர் தடுக்கவில்லை. தனிப்பட்ட ரீதியிலும் பலரிடம் சசிகலாவை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று மாவையர் கோரியிருக்கிறார்.

அதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் சங்கு கூட்டணிக்கே முழு ஆதரவளித்தார். கிளிநொச்சியில் சங்கு கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்தில் பகிரங்கமாகவே ஏறி "உங்களைப் போல நானும் சங்குக்கே வாக்களிப்பேன்" என்று அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கூறினார். ஆக மொத்தத்தில் கடந்த இரு தேர்தல்களிலும் கட்சிக்கு எதிராகவே வேலை பார்த்துவிட்டு தேசியப் பட்டியலுக்கு மட்டும் மாவையர் ஆசைப்படுவதை ஏற்பதற்கு கட்சியிலுள்ள பலரும் தயாராக இல்லை. அதனால் மாவையருக்கு தேசியப் பட்டியல் கிடைப்பது துர்பலமே.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர்களோ அல்லது அமைச்சரவை அல்லாத அமைச்சர்களோ நியமிக்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார். அந்த முடிவில் மாற்றமில்லை. அந்த தீர்மானத்தினையே பின்பற்றுவோம் - என்றார்.

## தேசியப்பட்டியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருக்கான இடத்தை இம்முறை யாழ்ப்பாணத்திற்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அதனை வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுத்து வருவதோடு பெண் ஒருவருக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தினை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

## டக்ளஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய வாக்குகள் அடியோடு வழித்தெடுக்கப்பட்டுவிட்டது என்று யாரும் கவலைப்படவேண்டாம். உண்மையில் டக்ளஸ் மற்றும் அங்கஜன் போன்றோரின் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

டக்ளஸ், அங்கஜன் போன்றவர்களை மக்கள் நிராகரித்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் வெற்றியினால் தமிழ்த் தேசியத்தையும் தமிழ்க் கட்;சிகளையும் தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்று சித்தரிக்க வேண்டியதில்லை.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் முடிவுகள் முழு நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் பல செய்திகளைச் சொல்லியுள்ளது. தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்றோம். தோல்விகள் பின்னடைவுகள் புதிதல்ல. மீண்டும் எழுந்து நிற்போம்.

இந்தத் தேர்தல் முடிவுகளால் தமிழ்த் தேசியத்தை எவரும் பேசக்கூடாது என்று அர்த்தமல்ல. தமிழ்த் தேசியம் தொடர்பில் அறிவுரைகூறும் யோக்கியதை அர்ச்சுனாவுக்கு இல்லை. மக்களின் தீர்ப்பின் அடிப்படையில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படட்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும் என்பதே மக்கள் தீர்ப்பு. சிங்கள இனவாதக் கட்சிகளின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக ஒன்றுபடவேண்டும்.

தற்போதைய நிலையில் சமஷ்டியை ஆதரிக்கின்றவர்களுக்கே அதிகமாக வாக்குகள் கிடைத்துள்ளன. ஆனால் ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை தான் இங்குள்ளது. ஒற்றையாட்சியை ஆதரிக்கின்ற கட்சியாகவே தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஒற்றையாட்சியைமையப்படுத்தி அரசமைப்பை அமைப்பதற்கு முனைகின்றபோது நாம் நிச்சயமாக அதனை எதிர்ப்போம். எமது மக்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் கவலைப்படுவார்கள் என்றார்.

## ஐதேகவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கொழும்பில் நேற்று பொதுத் தேர்தல் முடிவுகள் சம்பந்தமாக செய்தியாளர்களிடம் பேசியபோது இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலின் பின்னரான சூழல்கள் உணரப்பட்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடத்தில் பகிரங்கமான கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன். ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மீண்டும் இணைந்து செயற்பட வேண்டும். யானையை மீண்டும் பலப்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தினைக் கோரியமைக்காக என்னைக் கட்சியில் இருந்து நீக்குவார்களோ தெரியாது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவது மிகவும் அவசியம். ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பது தான் தற்போதுள்ள சவாலான விடயமாகும். அந்த சவாலை முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம் - என்றார்.

## சஜித் அறிக்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சிக்குத் தேவையான பலமும், மக்களின் கனவுகள் நனவாகும் தேசத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஆற்றலும் தற்போதைய ஆட்சிக்கு குறைவில்லாமல் கிட்டியுள்ளது. இதன் ஊடாக ஒரு நாடாக நாம் தற்போது எதிர்நோக்கி வரும் சிரமங்களை போக்கக்கூடிய வல்லமை தற்போதைய ஆட்சிக்கு கிட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ், இந்நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில், தமது கொள்கைகளையும் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதே தமது சவாலாக இருப்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என நாங்கள் நம்புகின்றோம்.

'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற அவர்களின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நாட்டின் 220 இலட்சம் மக்களின் அபிலாஷைகளைக் கட்டியெழுப்பும் இயலுமை அவர்களுக்கு உதயமாகட்டும் என ஐக்கிய மக்கள் சக்தியினராக நாம் பிரார்த்திக்கிறோம்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்க்கட்சி அரசியல்வாதியாக அப்போது கூறியது போல், தற்போதுள்ள அரசியல் சக்திகள் மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் சட்டங்களை இயற்றியதை மறந்துவிடக்கூடாது என்பதையும் தற்போதைய ஆளும் தரப்புக்கு நினைவூட்டுகிறோம்.

இந்த தீர்மானமிக்க தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கு 1,968,716 வாக்குகளைப் பெற்றுத் தந்தும், 40 நாடாளுமன்ற ஆசனங்களை வெற்றியீட்டித் தந்த, கட்சியின் கொள்கைகள், வேலைத்திட்டம் மற்றும் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்கும், கட்சியின் வெற்றிக்காக தோள் கொடுத்த சகல தரப்பினருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக நான் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வளமான நாட்டிற்குத் தேவையான அரசியல் நிகழ்ச்சி நிரல்களை தயாரித்த ஐக்கிய மக்கள் சக்தியாக எதிர்காலத்திலும் இந்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மிக உன்னத ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கும் பணிக்காகவும் எம்மை அர்ப்பணித்துச் செயற்படுவோம் என்பதை சகல இலங்கை வாழ் குடிமக்களுக்கும் சுட்டிக்காட்டுகிறோம். இப்பூலோகத்தில், இலங்கையின் தனித்துவ அடையாளத்தை நிலைப்படுத்த நாம் ஒன்றாய் இணைந்து நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## இன்றைய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டில் இருப்பதால் தேசியப் பட்டியல் மூலம் அவர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகிவிடுவார் என்று, நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய, தமிழ் அரசுக் கட்சியிலிருந்து சட்டத்தரணி தவராசா தலைமையிலான சுயேச்சைக் குழுவிற்குத் தாவிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் குற்றஞ்சாட்டியிருந்தார். அவ்வாறு நடக்க அனுமதிக்கக்கூடாதுஎன்றும்தெரிவித்திருந்தார்.

"தேசியப்பட்டியல் ஆசனம் ஒருபோதும் எனக்கு வேண்டாம் என்று கூறிய சுமந்திரன், மத்திய குழு எடுக்கும் தீர்மானத்திற்கு கட்டுப்படுவேன் என்று தெரிவித்துள்ளார், மத்திய குழுவை நடத்தி செல்வதே சுமந்திரன் தான் என்பது பலருக்கு தெரியாது. ஆகவே அவர் அதன் மூலமாக தேசியப்பட்டியல் ஆசனத்தினைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு மீண்டும் செல்லவே எதிர்பார்கின்றார்.

மத்தியகுழுவில் உள்ள பெரியவர்களை குறைகூறிப்பயனில்லை. ஏனென்றால் சுமந்திரன் கூறுகின்ற அனைத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டு தலையசைத்துவிட்டுச் செல்கின்றவர்களாகவே உள்ளனர்.

மக்களால் தோற்கடிக்கப்பட்ட சுமந்திரனை மத்தியகுழுவில் முன்மொழிந்து வழிமொழிந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்ப முயன்றால் அவ்வாறு செயற்படுபவர்கள் மக்களுக்கு காட்டிக் கொடுக்கப்படுவார்கள்'' என்று சரவணபவன் தெரிவித்தார்.

இது குறித்து சுமந்திரனிடம் கேட்டபோது, தேசியப் பட்டியல் குறித்துத் தீர்மானிக்க கட்சியின் அரசியல் குழு இன்று வவுனியாவில் கூ-டுகின்றது. அங்கு கேட்டுக்கொள்ளப்பட்டாலும் அதனை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று காலைக் கதிர் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

## தேசியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளார் என்று பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களுக்கு பொருள்கள் மற்றும் பணம் கொடுத்து வாக்கு பெறுவதை றிசாத், மஸ்தான் நிறுத்தவேண்டும்

## நீதிமன்றம் வரை செல்வோம் எனவும் உதயராசா எச்சரிக்கை



தமிழ் மக்களுக்கு பொருள்கள், பணம் கொடுத்து வாக்கு பெறுவதை

றிசாத் - மஸ்தான் நிறுத்த வேண்டும். ஆதாரங்கள் உள்ளன. நீதிமன்றம் வரை செல்வோம் என ஜனநாயக தேசியக் கூட்டணியில் வன்னியில் போட்டியிட்ட ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நடந்துமுடிந்தநாடாளுமன்றதேர்தலில்ஜனநாயக தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட நாங்கள் சொற்ப வாக்குகளால் தோல்வியடைந்துள்ளோம். தொடர்ந்தும் நாடாளுமன்ற தேர்தல்களில் எமக்கு இவ்வாறான நிலையே வருகிறது. அதற்கு காரணம் சில அரசியல் கட்சிகள் தேர்தல் விதிமுறைக்கு மாறாக பணங்களை அள்ளி இறைத்தும், பொருள் களை கொடுத்தும் எங்கள் போன்ற கட்சிகளுக்கு வரவேண்டியவாக்குகளைமாற்றிஅமைத்துள்ளார்கள். தேர்தல் சட்ட திட்டங்களை மீறி இதனை செய்துள்ளார்கள். காதர் மஸ்தான் உட்பட சில கட்சிகள் இந்த வேலையை செய்துள்ளன.

குறிப்பாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பிரதிநிதியாக வர வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று கொடுத்து வருகிறார்கள். அதையும் தாண்டி எந்தவிதமான பொருள்களுக்கும் விலை போகாமல் கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேர் எங்களுக்கு வாக்களித்துள்ளார்கள். ஆளுமையுள்ள ஒரு தமிழர் வன்னிக்கு தேவை என வாக்களித்து வருகிறார்கள். அந்த எதிர்பார்ப்பு தோல்வியடைந்து பணம் தான் பாதாளம் வரை பாயும் என்பதை ஒவ்வொரு தேர்தல்களும் எடுத்து காட்டுகிது. இவ்வாறான நிலைமை இனியும் வரக் கூடாது.

யுத்தத்தால் முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டது தமிழினம். அவர்களின் வாக்குகளைப் பெற்று வேறு இனத்தவர்கள் தமிழரின் பிரதிநிதியாக வர வேண்டிய தேவை இல்லை. ஏன்எனில் எல்லா தகுதியும் உள்ள பல தமிழர்கள் வன்னி நிலப்பரப்பில் இருக்கிறார்கள். மண்ணுக்காக மரணித்த லட்சக்கணக்கான மக்கள், மாவீரர்கள் ஆகியோரின் ஆத்மாவுக்காக தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இதனை வேறு கட்சிகள் கதைப்பதில்லை. தேர்களில் தாம் வென்றால் சரி என செயற்படுகிறார்கள். மக்கள் பிழையாக வழி நடத்தப்படுவதை அவர்கள் கவனிப்பதில்லை. சரியான வகையில் மக்களை வழி நடத்தாமையால் மாற்று இனத்தவர் பின்னே போகும் நிலை வந்துள்ளது.

இந்த தேர்தலில் கூட பல மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதிகளை இழந்துள்ளது. கொழும்பில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாத நிலை உருவாகியுள்ளது. நாங்கள் சிந்திக்காத இனமாக இருந்தால் மண்ணுக்காக இரத்தம் சிந்திய போராளிகளுக்கு நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என யோசிக்க வேண்டும். போராளிகள் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த தாய்மாரின் பிள்ளைகள். தேர்தலில் நீங்கள் இதனை உணர வேண்டியது காலத்தின் தேவை.

அவர்கள் எங்களது இனத்தவர்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு வென்ற பின் எங்களது கலாசாரத்திற்காகவோ, அல்லது ஆலயத்திற்கோ வந்து வழிபடுவது இல்லை. இஸ்லாமியர்களாகவே செயற்படுகின்றனர். தமிழர் பகுதிகளில் வாக்குகளை சூறையாடி தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதே அவர்களது வேலை.

எமது கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிகள். தேர்தலில் தோற்றாலும் விட்டு ஓடுபவன் நான் இல்லன். எமது அரசியல் பயணம் தொடரும். ஆனால் இவ்வாறான பொருள்களைக் கொடுத்து, காசு கொடுத்து தொடர்ந்து தமிழ் மக்களது வாக்குகளைப் பெறலாம், வெல்லலாம் என நினைக்கும் நீங்கள் உங்களது முடிவுகளை மாற்றி உங்களது இனத்தின் பிரதிநிதியாக அவர்களது வாக்குகளைப் பெற்று வர முடிந்தால் வாங்கோ. அல்லது தேர்தலில் இருந்து ஒதுங்க வேண்டும். றிசாட், மஸ்தான் போன்றவர்களுக்கு பகிரங்கமாக கூறுகின்றேன். இனத்தின் அடையாளத்தை அழிக்கும் வேலையை செய்யாதைங்கோ.

தமிழ் கிராமங்களில் பொருள்கள், பணம் கொடுத்து வாக்குளைப் பெற்றால் உங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கையை நாங்கள் எடுக்க வேண்டி வரும். ஆகவே உங்களது பெயர், மதம், இனத்திற்கு ஏற்ற மாதிரி வாக்குளைப் பெறுங்கள். மக்கள் விரும்பி வாக்களிப்பது வேறு. பொருள்களைக் கொடுத்து பிழையான விதத்தில் பெறுவது வேறு. மக்களின் வறுமையை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கீழ்தரமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் தேர்தல் கலாசாரத்தை மாற்றவேண்டும்.

ஆதாரபூர்வமாக என்னிடம் உள்ளது. காதர் மஸ்தான் பல கோடிக்கணக்கான பணங்களை செலவழித்துள்ளார். பல பொதிகள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டுள்ளன. வேட்பாளரின் ஸ்ரிக்கர் ஒட்டிய பல வாகனங்கள் வேட்பாளர் இல்லாமல் பயணித்துள்ளது. சில வானகங்கள் பிடிக்கப்பட்டுள்ளன. தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட முறைப்பாடும் இருக்கிறது. இவ்வாறான சண்டித்தன அரசியலை 2024 ஆம் ஆண்டுடன் நிறுத்தினால் ஆரோக்கியமனதாக இருக்கும்.

நீங்கள் வென்றும் ஒன்றும் செயப்போறதில்லை. அரசாங்கம் ஊழலற்ற அரசாங்கத்தை கொண்டு வரவேண்டும் என்னும் போது இந்த தேர்தலில் நீங்கள் செய்த ஊழல் ஓர் உதாரணம். இதனை பகிரங்கப்படுத்துவோம். நீதிமன்றம் வரை செல்லுவோம் எனத் தெரிவித்தார். (100)

### தமிழ் அரசுக் கட்சி தேசியப்பட்டியல் மூலம்

# வடக்கு வாழ் மலையகத்தவருக்கு ஒரு பிரதிநிதித்துவம் தாருங்கள்

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜ் கோரிக்கை



இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பாராளுமன்ற தேர்தலில் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை வடக்கில் வாழும் மலையக மக்களை பிரதிநிதித் துவப்படுத்தி வழங்குமாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் அவர்களிடம் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கை முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜ் முன்வைத்துள்ளதுடன், அதன் பிரதிகள் இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் -

எம்.பி.நடராஜ் ஆகிய நான் இலங்கை தமிழரசுக் கட்சியில் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர். 1995 ஆம் ஆண்டு முதல் இக்கட்சியுடன் இணைந்து பயணித்துள்ளேன். 2013 ஆம் ஆண்டு வடமாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு 10,800 வாக்குகளைப் பெற்றதுடன் சுழற்சி முறை உறுப்பினராகவும் பதவிவகித்தேன். 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் மூன்று முறிப்பு வட்டாரத்தில் போட்டியிட்டேன். ஆனால் தேர்தல் நடைபெறவில்லை.

கடந்த காலங்களில் வடக்கு மலையக மக்கள் சார்பாக ஒத்துழைப்புடனும், விட்டுக் கொடுப்புக்களுடனும் செயற்பட்டேன். இந்நிலையில் வடக்கு பகுதியில் வாழும் 2 லட்சம் மலையக மக்கள் சார்பாக தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை தனக்கு வழங்குமாறும் அவர் கோரியுள்ளார்.

மேலும், தேசியப் பட்டியலில் தனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆரோக்கியமான அரசியலுக்கு ஆதரவளித்த மக்களுக்கு நன்றி

## எமில்காந்தன் தெரிவிப்பு

ஆரோக்கியமான அரசியல் பயணத்திற்கு ஆதரவளித்த மக்களுக்கு நன்றிகள். மக்களுக்கான அரசியல் பயணம் தொடரும் என கோடாரி சின்ன முதன்மைவேட்பாளர்எமில்காந்தன்தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள்கோடாலிச்சின்னத்தில்போட்டியிட்டு8ஆவது இடத்தை பெற்றுக் கொண்டோம். 48 அணிகள் போட்டியிட்ட நிலையில் மக்கள் எங்களுக்கு அளித்த வரவேற்பின் காரணமாக 8 ஆவது இடம் கிடைக்கப் பெற்றது. ஆகவே எங்களை வரவேற்ற, எங்களுக்கு ஆதரவளித்த மக்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

தொடர்ந்தும் நான் உங்களுடன் அரசியல் பயணத்தை மேற்கொள்வேன். மக்கள் மயப்படுத் தப்பட்ட அரசியல் மிகவும் சவாலான நேரத்தில் தான் நாங்கள் உங்களிடம் வந்தோம். பொதிகள், சாராயம் கொடுக்கும் இந்த கலாசாரத்தை விலக்கி ஓர் ஆரோக்கியமான அரசியலை மக்களிடம் கொண்டு சென்றோம்.



அந்தவகையில், மக்கள் எம்மை ஏற்றுக் கொண்டு வாக்களித்துள்ளார்கள். இதனால் நாம் 7,484 வாக்குகளை வன்னியில் பெற்றோம். தபால் மூல வாக்கில் 639 வாக்குகளைப் பெற்று 5 இடத்தைப் பிடித்தோம். ஆகவே வாக்களித்த மக்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகள். மக்களுக்கான எமது அரசியல் பயணம் தொடரும் எனவும் தெரிவித்தார்.

(100)

# வன்னியில் 15,254 வாக்குகள் நிராகரிப்பு

வன்னியில் நடைபெற்று முடிந்தநாடாளுமன்றத்தேர்தலில் தபால் மூல வாக்குகள் 466 உட்பட 15,254 வாக்குள் நிராகரிக்கப்பட்டுள்ளன என மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 3 லட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இதில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 140 பேர் வாக்களித்தனர். அதில் தபால் மூல வாக்களிப்பு 466 உட்பட 15,254 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 886 வாக்குகள் ஏற்றுக் கொள்ளபட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## இனியாவது ஏமாற்றாதிருங்கள்

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் ஒரு சில இடங்களை தமிழ் அரசுக் கட்சி இழந்திருப்பதையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன தலா ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்றிருப்பதையும் அடுத்து தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒற்றுமைப்படவேண்டும் என்கிற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. வடக்கு கிழக்கு முழுவதும் உள்ள தேர்தல் மாவட்டங்கள் அனைத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றிகொண்டு, அதிலும் கிழக்கில் அதியுச்சமான ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு தனிப் பெரும் கட்சியாக தமிழ் அரசுக் கட்சி எழுச்சி பெற்றுள்ள பின்னணியில் இந்த ஒற்றுமைக் குரல்கள் மீண்டும் வடக்கில் எழுகின்றமை கவனத்திற்குரியது.

அடுத்தடுத்து வரவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டே இந்தக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி, முன்னணி ஆகியன தனித் தனியாகப் பிரிந்து நின்று இந்தத் தேர்தலையும் எதிர்கொண்டால் வடக்கில் தேசிய மக்கள் சக்தியிடம் அவற்றையும் இழந்து விடுவோமோ என்கிற அச்சமே அதற்குக் காரணம். ஆனால் இது வடக்கின் அச்சம் மட்டுமே என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக, அதாவது ஒற்றுமையாக தமிழ்க் கட்சிகள் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது கிடைத்த ஆசனங்களைவிட மூன்று ஆசனங்களை தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டபோது அதிகமாகப் பெற்றுள்ளது. எனவே வடக்கில் தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் எழுப்பப்படும் ஒற்றுமைக் கோசம் கிழக்கில் பலமற்றது.

ஆகமொத்தத்தில், வடக்கில் ஆட்சியைப் பிடிப்பதற்காக தேர்தல்காலக் கூட்டுக்களுக்கு தமிழ்க் கட்சிகள் போகலாமே தவிர, அதனைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையாகக் காட்டி இனியும் மக்களை ஏமாற்ற முற்படக்கூடாது. இப்போதும் தேர்தல் பின்னடைவுகளின் அடிப்படையில் அடுத்தடுத்த தேர்தல் அடைவுகளுக்காக இந்தக் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவதைப் பற்றி யோசிக்கின்றனவே தவிர, தமிழ் இனத்தின் நலனுக்கான ஒற்றுமைப்பாடாக அது இல்லை. ஒருபோதும் அப்படி இருக்கப்போவதுமில்லை.

ஒவ்வொரு கட்சியும் அதன் தலைவர்களும் தத்தமது கட்சி மற்றும் சொந்த நல்களை முன்வைத்து ஆளும் தரப்புடன் தனித் தனியாகப்பேரம்பேசியும்பின்கதவு உறவுகளைவைத்தும்காரியம் சாதித்துக்கொண்டு, தமிழ் மக்களின் முன்னாள் தேசியம் பேசியபடி இனத்துக்காகவே நாங்கள் போரா–டுகின்றோம் என்று பேசி வந்ததை தமிழ் இனம் நன்கு அறியும். அரசுத் தலைவர் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் தமிழ்க் கட்சிகள் நடத்திய ஒற்றுமை நாடகத்தையும் அடுத்த தேர்தலிலேயே அவை வெளிப்படுத்திய சுயநல முகத்தையும் தமிழ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கின்றோம், தமிழர்களின் நலன்களுக்காக அதைச் செய்கின்றோம், தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்தால் தமிழ் மக்களுக்குத் தேனும் பாலும் ஓடும் என்றெல்லாம் பாசாங்கு செய்யவதை விடுத்து, தேர்தலில் ஆசனங்களைப் பெறுவதற்காக இந்த இந்த அடிப்படைகளின், நிபந்தனைகளின் அடிப்படையில் சேர்ந்து போட்டியிடுகின்றோம் என்று மக்கள் முன்பாக உண்மையைச் சொல்லி போட்டியிட இனிமேலாவது தமிழ்க் கட்சிகள் முன்வரவேண்டும். இவற்றை ஒன்றிணைப்பதாகச் சொல்பவர்களும், தேர்தல் ஆசனங்களுக்காகவேதமிழ்க்கட்சிகளைஒன்றிணைக்கின்றோம் என்பதை வெளிப்படையாகவே அறிவித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்துக்காக வாக்களித்து வந்தாலும், இந்தத் தேர்தலிலும் அதிகளவானோர் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தே வாக்களித்திருந்தாலும் சில கட்சிகள் தனித்துப் போட்டியிட்டதனால் அதிக ஆசனங்களைக் கைப்பற்ற முடியவில்லை என்பதே இவர்களின் பிரச்சினை அது தவிர தமிழர்களின் இன நலனுக்காக ஒற்றுமைப்படுவது அல்ல. அப்படி ஒற்றுமைப்படுவதாயின் அவர்கள் தமது கட்சிகள் அனைத்தையும் கலைத்துவிட்டு ஒரு கட்சியில் மட்டுமே சேர்ந்துகொள்ளவேண்டும். எந்தவொரு காலத்திலும் அத்தகைய ஒற்றுமை ஒன்றுக்குத் தமிழ்த் தலைவர்கள் முன்வரமாட்டார்கள் என்பதால் தேர்தல் கால கூட்டுக்களுக்கு மட்டும் முயற்சிப்பதே சாத்தியமானது. அதனை இனத்துக்கான ஒற்றுமை என்று முத்திரை குத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

# புதிய எம்.பிக்கள் பதிவு இன்று முதல் ஆரம்பம்

10ஆவதுநாடாளுமன்றத்திற்குதெரிவுசெய்யப்பட்ட புதியநாடாளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படிஇன்று முதல் இணையவழி முறைமை ஊடாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை பதிவு செய்துக் கொள்ளலாம் என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு தேவையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக எதிர்வரும் 19, 20ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இரண்டு தகவல் சாளரங்களை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற மரபு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 3 நாள் செயலமர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

25, 26, 27 ஆகிய திகதிகளில் செயலமர்வு நடைபெறுகிறது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்பட உள்ளது. புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21ம் திகதி காலை 10 மணிக்கு கூடவுள்ளது.

# தேசியப் பட்டியலுக்கு யார் தெரிவாகலாம்?

## தேர்தல் ஆணையாளர் விளக்கம்



தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு ஏற்கனவே கட்சிகளால் பரிந்துரைக் கப்பட்டவர்கள் அல்லது சமீபத்திய பொதுத் தேர்தலில் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டு தெரிவுசெய்யப்படாதவர்கள் மட்டுமே தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்திற்கு பெயரிட முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளுக்கு அமைவாக தேசியபட்டியல் ஆசனங்களின்ஒதுக்கீடுகள்அறிவிக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் தங்களது தேசியப்பட்டியலை சமர்ப்பித்துள்ளன. அவ்வாறான நிலையில், அக்கட்சிகள் தமது தேசியப்பட்டியல் ஊடாக தெரிவாகும் உறுப்பினர்களை இறுதி செய்து எமக்கு அறிவிக்க வேண்டும். அவர்கள் தேசியப் பட்டியலில் உள்ளவர்களையோ அல்லது தேர்தலில் போட்டியிட்டு தெரிவுசெய்யப்படாத வேட்பாளர்களையோ உறுப்பினர்களாக அறிவிக்க முடியும். அதனைத் தாண்டி வேறு எவரையும் அவர்களால் பெயரிட முடியாது. தேசியப்பட்டியலுக்காக பெயரிடப்படுபவர்கள் பட்டியல் கட்சியின் செயலாளரால் எமக்கு குறித்துரைக்கப்படும் என்றார்.

இதேவேளை, தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசியல்கட்சிகள்மற்றும்சுயேச்சைக்குழுக்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின்மேலதிகதேர்தல்ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்தார்.தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, தேர்தல் முடிந்த 21 நாட்களுக்குள் அனைத்து செலவு அறிக்கைகளையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8888 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணையின் போது, உரிய நேரத்தில் வருமான அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, வேட்பாளர்கள் சொத்து பொறுப்பு அறிக்கைகளையும் ஆணைய கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட் டுள்ளார்.

# ஜனாதிபதி அநுரவுக்கு பெரும் பொறுப்புண்டு

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் கருத்து

வடக்கு - கிழக்கு மக்கள்கூட இந்த ஜனாதிபதியைச் சார்ந்த கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே ஜனாதிபதிக்கு ஒரு பெரும் பொறுப்பு இருக்கிறது. மக்கள் எதிர்பார்ப்புக்களை அவர் நிறைவேற்றுவார் எனநம்புகிறோம்என்றுவன்னிமாவட்டபாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்குக்கருத்துத்தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி தலைமையிலான கட்சி போனஸ் ஆசனம் உட்பட இரண்டு ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு ஆசனத்தை பெற்றுள்ளது, மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்கை வன்னி மக்கள் எனக்கு வழங்கியுள்ளார்கள். எமது கட்சியில் போட்டியிட்ட அனைவரதும் அயராத முயற்சிதான் இந்த வெற்றிக்குக் காரணம். மாவட்ட மக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

வன்னி மாவட்ட மக்களுக்கான பணியை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். அதுபோல் அம்பாறை மாவட்டத்தில் எனது கட்சி தனியாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. அந்த மக்களுக்கும் எனது நன்றிகள். புத்தளம், அனுராதபுரம், குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எமது கட்சிக்கு மக்கள் வாக்களித்தாலும் வெல்ல முடியவில்லை. அந்த மக்களுக்கும் எனது நன்றிகள்.

தேர்தலுக்கு பின் எனது பணி முன்னர் செய்ததை விட அதிகமாக இருக்கும் என்பதை கூறிக் கொள்கின்றேன். இந்த தேர்தல் ஒரு புதிய செய்தியை சொல்லியிருக்கிறது. நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு ஜனாதிபதியையும், ஜனாதிபதியின் கட்சியையும் வெல்லச் செய்திருக்கிறார்கள்.

ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும், புதிய உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுப்பதற்கான உத்வேகத்தை இந்தத் தேர்தல் வழங்கியிருக்கிறது

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அணியாகப் போட்டியிட்ட நாம் நாடாளுமன்ற ஆசனத்தை வெல்ல முடியாதபோதும் மக்கள் எமக்குக் கணிசமான வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள்.

படைபலம், பணபலம், பன்னாட்டு நிறுவனங்களின் பின்புலம் எதுவுமில்லாத சாமானியர்களின் கட்சியான எமக்குத் தென்னிலங்கை

அரசியற்சூறாவளி இங்கு ஏற்படுத்தியிருக்கும் அலைகளின் மத்தியிலும் மக்கள் 7,496 வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள். இது தமிழ்த்தேசியத்தில் பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுக்கும் உத்வேகத்தை எமக்கு வழங்கியிருக்கிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், சனநாயகத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிட்டிருந்தது. இத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சையாகத் தேர்தலை எதிர்கொண்டபோதும், தேர்தல்களின்போது

மாத்திரம் தோன்றி மறையும் மழைக் காளான் சுயேச்சைகள் அல்லர் நாம். மாறாக, நாம் இந்த மண்ணில்

நிலையாகக் காலூன்றிச் சமூக, அரசியற்செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற ஒரு பசுமைக் கட்சி ஆகும்.

உலக நாடுகளில் சூழல்சார் அரசியல் காத்திரமான முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் பசுமைக் கட்சிகள் உருவாகி, நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், பேரினவாதம் கோலோச்சும் இலங்கையில் சூழலியல் வாதம் இன்னமும் கண்டுகொள்ளப்படாமலேயே உள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தேசியத்தையும் சூழலியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத கோட்பாடுகளாகக் கருதியே பயணித்து வருகின்றது. தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகளில் சில

அணிந்திருக்கும் போலித்தேசிய முகமூடிகளும், கட்சிகளின் உள்ளே நிலவும் எதேச்சதிகாரமும் ஜனநாயக

மறுப்பும், அவற்றின் சூழலியம் பற்றிய ஆழமான புரிந்துணர்வின்மையும் எம்மைத் தனிவழி பயணிக்க

வைத்திருக்கிறது. எனினும், உண்மையான தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ்த்தேசியவாதிகள் ஒருங்கிணைந்து

பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் தொடர்ந்து வலியுறுத்தியே வந்துள்ளோம்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்த்தேசியவாதிகளின் ஒற்றுமையை வலியுறுத்துவனவாகவே அமைந்துள்ளன.

உண்மையான தமிழ்த்தேசியவாதிகள் ஒவ்வொருவரும் அடுத்தவரது சுயத்தை அங்கீகரித்தவாறு, ஒருவரில்

இன்னொருவர் ஏறிச் சவாரிக்கும் கபட நோக்கு இல்லாது இதய சுத்தியுடன் ஒரு குடையின்கீழ் பயணிப்பதற்கு

முன்வரவேண்டும். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கும். நாடாளுமன்ற

உறுப்பினர்களாகத் தெரிவானவர்களுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, எம்மை வெற்றிபெற

வைக்கவேண்டும் என்று கடுமையாக உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியினது கொள்கை பிரகடனம் நவ. 21

நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, புதிய ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.

இதற்கமைய பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி வைபவரீதியாக முதலாவது அமர்வை ஆரம்பித்து வைக்கவிருப்பதுடன், அரசமைப்பின் 33 (2) உறுப்புரையின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய அவர் புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.

(05)

# கொடவெஹெரவில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொடவெஹெர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அஹூபொடகம பிரதேசத்தில் , உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கொடவெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

கொடவெஹெர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொடவெஹெர பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடவெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதே எமது எதிர்பார்ப்பு

## நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய இம்ரான் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதற்கே எதிர்பார்க்கிறேன்மாறாகவாக்குகறை விற்கவோ சொந்த இலாபத்துக்காக பயன்படுத்தவோ பக்கட்டுக்களை நிறைத்து கமிசன் அரசியலையோ செய்ய மாட்டோம் என ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்துநாடாளுமன்றஉறுப்பினராக தெரிவான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.



கிண்ணியாவில் இடம் பெற்ற மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

மக்கள் எதிர்பார்த்த உண்மை நீதி நியாயமான தூய்மையான அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளோம். மக்கள் எதிர்பார்ப்பு மூலமாக சரியாக தங்களது உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளார்கள் இதன் மூலம் ஊழல் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் எடுத்துள்ளார்கள். இதனால் மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும் உரிமைகள் அபிவிருத்தி விடயங்களில் மக்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செய்யவேண்டியவேலைகளை செய்துமக்கள்எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் .

மூதூர் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிவாகை சூடியுள்ள நிலையில் கடந்த காலங்களில் இரு உறுப்பினர்களை பெற்ற நிலையில் தற்போது ஓர் ஆசனத்தை பெற்றுள்ளோம். எனவே வாக்களித்த திருகோணமலைமாவட்டமக்களுக்குநன்றிகளையும் தெரிவிக்கிறேன். - என்றார்.

# நாடாளுமன்றில் தமிழ் உறுப்பினர்களை ஒன்றிணைக்க முயல்வாராம் செல்வம்




தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும்ஒன்றிணைத்துநாடாளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சினைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயற்பட நடவடிக் கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்செல்வம்அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இனப்பிரச்சினைகுறித்தும்,அபிவிருத்திதொடர்பாக வும் கூடிய கவனம் செலுத்துவதாக கோரி மக்களிடம் நாங்கள்வாக்குசேகரித்தோம். குறித்தஇருவிடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படுகின்ற ஒரு சாத்தியப்பாட்டை மேற்கொள்கின்ற சூழலை உருவாக்குவதாகவும் நாங்கள் கூறியிருந்தோம்.

குறித்த இரு விடயங்களிலும் நாங்கள் கவனம் செலுத்துவோம். கிராமியரீதியாகமக்களின்குறைகளை கேட்டறிந்து கிராமங்களை முன்னேற்றுவதே நோக்கமாக இருக்கும். மேலும் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை நாங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுவதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்குவோம்.

மேலும், இம்முறை நாடாளுமன்ற தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து நாடாளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சினைகளைநாங்கள்கையாளுகின்றவகையிலே செயற்படநடவடிக்கைகளைமேற்கொள்ளஉள்ளேன்.

ஜனாதிபதி கூறியதுபோல் தமிழ் அரசியல் கைதிகளைவிடுதலைசெய்து,காணாமல்போனவர்கள் குறித்து அவர்களின் உறவுகள் போராட்டத்தின் ஊடாக நீதியை கோரி வருகின்றனர்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் ஒரு வழி முறையை நாங்கள் கையாளுகின்ற ஒரு சூழலை உருவாக்குதல், எமது நிலங்கள் பறிபோகாத ஒரு சூழலை ஏற்படுத்துதல், எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்.

எனவே, இம்முறை சங்கு சின்னத்துக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகள். மக்கள் சார்ந்த பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து, மக்களின்பிரச்சினைகளைதீர்ப்பதற்கான முறையை நாங்கள் கையாளுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# ரஷ்ய பெண் ஒருவர் மீது பாலியல் துஸ்பிரயோகம்

## காலியில் சம்பவம்

காலி, அஹுங்கல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ரஷ்ய பெண் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாக அஹுங்கல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

41வயதுடையரஷ்யபெண்ணொருவரேபாலியல்துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த ரஷ்ய பெண் கடந்த 8 ஆம் திகதி அன்று இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் அஹுங்கல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், இந்த ரஷ்ய பெண் கடந்த 12 ஆம் திகதி அன்று தனது பிறந்த நாளை கொண்டாடுவதற்காக அதிகளவில் மது அருந்திவிட்டு தனது ஹோட்டல் அறைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது ரஷ்ய பெண்ணின் ஹோட்டல் அறைக்குள் அத்துமீறி நுழைந்தஇனங்காணாதநபரொருவர் இந்த ரஷ்ய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதனையடுத்து, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான ரஷ்ய பெண் இது தொடர்பில் அஹுங்கல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைஅஹுங்கல்லபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீண்டநாள் கசிப்பு உற்பத்தி நிலையத்தை அதிரடியாகச் சுற்றிவளைத்த பொலிஸார்

## யாழ். வட்டுக்கோட்டையில் சம்பவம்





யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவிற்குட்பட்டபொன்னாலை தெற்கு, நெல்லியான் பகுதியில் உள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்று காலை வட்டுக்கோட்டை பொலிஸாரால் சுற்றிவளைப்பு செய்யப்பட்டது.



இதன்போது, 166லீற்றர்கள்கோடா, 10.5 லீட்டர் கசிப்பு என்பவற்றுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு சிறிய கொள்கலன்கள், இரண்டு செப்பு சுருள் என்பவற்றுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சி.ஐ.கொஸ்தா தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவுபொறுப்பதிகாரி, கெட்டியாராய்ச்சி, போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ரத்நாயக்க, பி.எஸ். ரத்நாயக்க, பி.சி விஜேரத்ன, பி.எஸ் ரத்நாயக்க, பி.சி பத்திராஜ, பி.சி மிகிர்சன், பி.சி. பெரேரா ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ் குழுவினரால்இந்தகைதுநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மட்டக்களப்பில் அரசியல் கட்சி அலுவலகமொன்றின் மீது தாக்கு



மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சி அலுவலகமொன்றின் மீது வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் அலுவலகம் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளார் என காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு காத்தான்குடி பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை தாருஸ்ஸலாம் விளையாட்டு மைதான வீதியில் அமைந்திருந்த மேற்படி தேர்தல் அலுவலகத்தின் மீது நள்ளிரவு அல்லது இன்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமென அலுவலகத்தின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியில் மொட்டுச் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்றத்தில் போட்டியிட்ட எம்.ஐ.அப்துல் வஹ்ஹாப் என்பவருக்கு சொந்தமான இந்த அலுவலகமே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

தாக்குதலில் அலுவலகத்தின் கண்ணாடிகள் முற்றாக சேதம் அடைந்துள்ளதுடன், அங்கு கட்டப்பட்டிருந்த விளம்பர பதாதைகளும் தாக்குதல் நடத்தியவர்களால் அளிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

தாக்குதல் நடந்த சம்பவ நேரத்தில் அலுவலகத்தில் யாரும் இருக்கவில்லை என்பதால் உயிராபத்துகளோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிகமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணையவேண்டுமாம்

கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர்கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும், நெருக்கடிகளையும், வலிகளையும், வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகிறது. எனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர், விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் -

2009 இற்கு பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கிறது.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தொடர்ச்சியாக வன்வலு கடந்த மென்வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதை எதிர்கொள்வது பாரிய சவாலாக உள்ளது.

அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று. ஆகவே ஒன்றாக இணைந்து அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமிழ்க்கட்சிகளின் பதவி சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு பல அணிகளாக பிரிவடைந்துள்ளனர்.

தமக்குள்ளான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும் இந்த தேர்தல் களம் தமிழ்க் கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசு பொருளாக்கியது.

இதனால் வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த்தேசிய கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தமிழ் கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே இலக்கில் செயற்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு விதமான சோதனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டதால் தம்மை தற்காத்துக் கொண்டனர்.

அவர்களுக்கு எமது பாராட்டுக்களும், வாழ்த்துகளும். ஆனால் வடக்கில் உள்ள நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஆளும் அரசே வெற்றி பெற்றிருப்பதால் எமது தமிழ் தேசியவாத அபிலாசைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகின்றோம் என்கிற கேள்வி எழுகிறது.

எனவே, தமிழ்த்தேசிய கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய்விடும்.

ஆகவே எதிர்காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களிலும் சரி, தமிழ்த்தேசிய உரிமை ஜனநாயக போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும்.

அதனையே மக்களும் விரும்புகிறார்கள். கடந்த பல வருடங்களாக இவ்வாறான ஐக்கிய முயற்சிகளை ஏற்படுத்தியவர்கள் என்கின்ற வகையிலும் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களியுங்கள் என கோரிக்கை விடுத்ததன் உரிமையிலும் எதிர்வரும் நாள்களில் தமிழ்த்தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றோம்.

அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். ஆளுக்கு ஆள் துரோகிப்பட்டம் வழங்குவதும் ஒரு கட்சி வந்தால் இன்னொரு கட்சி வரமாட்டேன் எனக்கூறும் வரட்டு வாதங்களை அடியோடு மறந்து விடுங்கள் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு தார்மீக பொறுப்பெடுக்க வேண்டியது சகல தமிழ்த் தேசியக்கட்சிகளும் ஆகும்.

தமது குறைபாடுகளையும், செயற்பாடின்மையும் இனிமேலாவது திருத்திக் கொள்வதற்கு முன்வர வேண்டும்.

ஆனாலும், தமிழ் மக்கள் இன ரீதியான சிந்தனை துவத்தை மறந்து தேசிய கட்சிக்கு வாக்களித்தது என்பது மிகவும் வேதனைக்குரிய பரிதாபகரமான நிலைப்பாடு ஆகும்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லை எனும் தோற்றப்பாட்டை வெளிப்படுத்திவரும் ஆபத்துண்டு.

அந்த மக்கள் எதிர்வரும் காலத்தில் தங்களுடைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

ஏனெனில் தேசிய கட்சிகளுக்குள் கரைந்து போவது என்பது தமிழ்த்தேசிய இருப்பை ஒருபோதும் கூர்மையாக தக்க வைக்க கூடிய கள நிலைமை உருவாகாது என்பதனையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே எமது முயற்சிக்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். - என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)



# தெற்குக் கட்சி வடக்கின் நம்பிக்கையை வென்றமையையிட்டு ஐ.தே.க. பாராட்டு



ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம்மக்களுக்குநிறைவேற்ற வேண்டிய பல எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. அதனை எவ்வாறு நிறைவேற்றுவதுஎன்பதைநாங்கள் பார்த்துக்கொண்டிருப்போம். என்றாலும் இந்த தேர்தல் மூலம் தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றிகொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டை தெரிவித்துக்கொள்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் வரலாற்று வெற்றியை பெறுள்ளது. அதுதொடர்பில் நாங்கள் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோன்று இது இலங்கைக்கு விசேட சந்தர்ப்பமாகும். இலங்கை வரலாற்றில் ஒருபோது எமக்கு நிறைவேற்றிக்கொள்ள முடியாமல்போன விடயமொன்றை தற்போதை ஜனாதிபதியும் அதிகாரத்துக்கு வந்துள்ள அரசாங்கமும் வெற்றி வெற்றுள்ளது. அதுதொடர்பில் இலங்கையர்கள் என்றவகையில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

உதாரணமாக, சுதந்திரத்துக்கு பின்னர் டி.எஸ். சேனாநாயக்கவுக்கு பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் தலைவர்கள் அமைச்சரவையில் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சரவையில் தமிழ் தலைவர்கள் அவர்களுக்குரிய கட்சிகளில் வெற்றிபெற்று பிரதிநிதித்துவம் செய்தே வந்துள்ளனர். அதாவது கடந்த அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் பிரதிநித்தும் செய்தாலும் தெற்கு அரசியல் கட்சி ஒன்றை பிரதிநித்துவப்படுத்தி அமைச்சரவையில் செயற்பட வில்லை. அதனால்தான் இது விசேட சந்தர்ப்பம் எனத் தெரிவித்தேன்.

தெற்கு அரசியல் கட்சி ஒன்றை பிரதிநிதித்துவம் செய்து வடக்கு, கிழக்கில் பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு சக்திகளுடன் செயற்பட்டு வரும்போது. தெற்கில் ஓர் அரசியல் கட்சி தொடர்பில் நம்பிக்கை வைத்து விசேட வெற்றியை பெற்றுக்கொண்டிருக்கிறது. அதன்போது அவர்களும் அமைச்சரவையின் உறுப்பினர்களாக வருவார்கள். அதனை இலங்கையர்களாக பெற்றுக்கொண்ட வெற்றியாகவே நாங்கள் பார்க்கிறோம்.

எவ்வாறு இருந்தாலும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துக்கு பாரிய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அதனை நிறைவேற்ற முடியாது என தற்போது அவர்களுக்கு தெரிவிக்க முடியாது. தேர்தலை வெற்றிகொண்டாலும் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல சவால்கள் இருக்கின்றன. அதனை வெற்றிகொள்வதற்கு முடியாமல் போகும் என்றே நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளோம்.

அது நாங்கள் பின்பற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே தெரிவிக்கிறோம். எவ்வாறு இருந்தாலும் ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. அதனால் இலங்கையராகதெற்குஅரசியல்கட்சிஒன்றுவடக்கின் நம்பிக்கையை வெற்றிகொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று கடந்த எதிர்க்கட்சி அவர்களின் பொறுப்புக்களை அவர்களுக்கு சரியாக செய்யமுடிய வில்லை என நாங்கள் கடந்த காலங்களிலும் தெரிவித்து வந்தோம். எங்களுக்கு புதிய அரசியல் கலாசாரம் தேவையாக இருக்கிறது. புதிய அரசியல் பயணம் ஒன்று தேவையாக இருக்கிறது.

நாங்கள் நம்பும் அரசியல் சிந்தனைக்கு அமைய ஆளும் அரசாங்கம் பொருளாதாரம் தொடர்பில் அதேபோன்று தேசிய மற்றும் சர்வதேச அளவில் அவர்கள் ஏற்றுக்கொண்ட சவால்களை வெற்றிகொள்ள வேண்டி இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு நாங்கள் இடையூறாக இருக்கக்கூடாது. அவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை நாங்கள் இலங்கையர்களாக பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். - என்றார். (05)

# தேசிய மக்கள் சக்தியின் பெரு வெற்றி ஆழமான சீர்திருத்தத்திற்கான ஆணை

## உலக நாடுகள் ஆதரவளிக்கவேண்டும் என்கிறார் எரிக்சொல்ஹெய்ம்



இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மகத்தான பெரும் வெற்றி ஆழமான சீர்திருத்தங்களிற்கான ஆணையை வழங்குகின்றது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது -

அனுரகுமார திசநாயக்க அல்லது மக்களால் ஏகேடி எனஅழைக்கப்படும்இடதுசாரிகூட்டணியின்தலைவர் இலங்கையில் முழுமையான தேர்தல் வெற்றியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றார்.அநேகமாக அனைத்துதொகுதிகளிலும்அவர்வெற்றிபெற்றுள்ளார்.

இது இலங்கைக்கு என்னதேவையோ அதனை செய்வதற்கான வலுவான வாக்குறுதியை வழங்குகின்றது.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு சிறந்த ஒப்பந்தத்திற்காக பேச்சுகளை மேற்கொள்ளல்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களைஅதன்பிடியிலிருந்துமீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம்.

தேசிய நல்லிணக்கம் சிறுபான்மை தமிழர்கள் முஸ்லீம்களிற்கான உரிமைகள். ஊழலிற்கு எதிராக கடுமையான போராட்டம். சுற்றுலாத்துறையில் பசுமை பொருளாதாரத்தை உருவாக்குதல்,சதுப்பு நிலங்கள் வனங்கள் வலுசக்தி மேலும் சில. இலங்கையின் அனைத்து நண்பர்களும் அதற்கு உதவ தயாராகவேண்டும்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2024இல் வெளியிடப்பெற்றது